# ஆத்தூர் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள்
## முன்னிலை – திரு.அ.வ.சையத்முஸ்தபாகமால்,பி.எஸ்.சி,

ந.க.எண்.3976 /2023 /எப்1.

நாள். 11.07.2024.

பொருள் : மனைப்பிரிவு – ஆத்தூர் நகராட்சி – ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு–எப் , பிளாக்–19, நகரளவை எண்–5/6 மற்றும் துளுக்கனூர் கிராம புல எண் , 129/2A1A1A,129/2A1A3, 129/1B1B2 – இல் அமைந்துள்ள 5315.53.ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை 19 மனைகளாக பிரித்து அமைக்கப்பட்ட மனைப்பிரிவில் இந்நகரப் பகுதியில் அமைந்துள்ள மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு. ரவி த/பெ சதாசிவம் 115/2 சுப்பராயன் நகர், புத்துமாரியம்மன் கோவில் (அஞ்சல்) சேலம். என்பவரது மனு நாள். 29.11.2023
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித ந.க.எண். SLM/TGAXYWKF/9305/2023/2022/TCP,நாள்.27.03.2023
3. நகரமன்ற தீர்மான எண்.908 , நாள்.04.03.2024
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.09.07.2024

****

உத்தரவு:

பார்வை 1–இல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு–எப் , பிளாக்–19, நகரளவை எண்–5/6 மற்றும் துளுக்கனூர் கிராம புல எண் , 129/2A1A1A,129/2A1A3, 129/1B1B2 -இல் அமைந்துள்ள 5315.53.ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை 19 மனைகளாக பிரித்து அமைக்கப்பட்ட மனைப்பிரிவில் இந்நகரப் பகுதியில் அமைந்துள்ள மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் வழங்க கோரியுள்ளார்.

பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தில் ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு–எப் , பிளாக்–19, நகரளவை எண்–5/6 மற்றும் துளுக்கனூர் கிராம புல எண் , 129/2A1A1A,129/2A1A3, 129/1B1B2 –இல் அமைந்துள்ள 5315.53.ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை 19 மனைகளாக பிரிவு செய்யப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு (SWP/DTCP/SALEM/Layout NO) மா.வ/ந.ஊ.உ.இ (சே.மா) எண்.141/2023 என எண்ணிடப்பட்டு பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.908, நாள்.04.03.2024–ல் சிறப்பு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மனைப்பிரிவு அனுமதி அளிப்பதற்கான கட்டணங்களை வசூலிக்கவும்,பொது உபயோக இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யவும், அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டபின் மேற்படி மனைகளுக்குண்டான கட்டணத்தை செலுத்திய பின்னர் இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.5000/– கூராய்வு கட்டணம் ரூ.3000/– ஆய்வு கட்டணம் ரூ.5000/–வைப்புத் தொகை ரூ.25,000/– கொடிநாள்ரூ.5000/– ஆகிய கட்டணங்கள் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தியும்,

நிலமாற்றக்கட்டணம் ரூ.3500/–ஐ சம்மந்தப்பட்ட அரசுதலைப்பில் செலுத்தி அதற்கான நகலை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4–இல் காணும் அறிவிப்பின் படி அனுமதி கட்டணம் ரூ.5000 /– கூராய்வு கட்டணம் ரூ.3000/– வைப்புத் தொகை ரூ.25,000/– ஆய்வு கட்டணம் ரூ.5000/– கொடிநாள்ரூ.5000/– ஆகிய கட்டணங்களை பற்றுச்சீட்டு எண் 045/01/3/24–25/0002044 நாள். 09.07.2024 அன்று இந்நகராட்சி கருவூலத்திலும், நிலமாற்றக்கட்டணம் ரூ.3500/–ஐ சலான் எண்.20240709025608 நாள்.09.07.2024 அன்று அரசுதலைப்பில் செலுத்தியுள்ளீர்.

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

| Online Registration No. | Village | Ward | Block No. | T.S.No / R.S.No | Plot No. | Extent In(SQ.M) |
|---|---|---|---|---|---|---|
| EIVLD0MJ | ATTUR | F | 19 | 129/2A1A1A, 129/2A1 A3, 129/1B1B2, 5/6 | 6 part<br>7 part<br>8 part<br>9 part | 564 |

நிபந்தனைகள்

1. அரசாணையின்படி, குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மட்டுமே இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / மனைகுடியிருப்பு உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ஆணை எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
3. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள்.04.02.2019–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள் 31.01.2020–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனையிட வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனை உட்பிரிவின் நுழைவாயிலில் 6x4அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.

11/7/24

ஆணையாளர்
ஆத்தூர் நகராட்சி.

11/7/24

பெறுதல்:
திரு. ரவி
த/பெ சதாசிவம்
115/2 சுப்பராயன் நகர்,
புத்துமாரியம்மன் கோவில் (அஞ்சல்)
சேலம்.
நகல்: சார் பதிவாளர், ஆத்தூர்,
நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம்.

துலுக்கனூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவக்கைகள்

முன்னிலை : திரு.S.மருதமுத்து

**துலுக்கனூர் ஊராட்சி மன்ற தீர்மான எண் : 168/2024, நாள் : 19.02.2024**

பொருள் :இறுதி ஒப்புதல் வழங்குதல் - ஆத்தூர் ஊராட்சி –துலுக்கனூர் ஊராட்சி சர்வே எண்.**129/2A1A1A, 129/2A1A3, 129/1B1B2** –ல் **1.0275** ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்புதுறை இணை இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – மனைப்பிரிவு உரிமையாளர் அனுமதி கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தியது – சம்மந்தப்பட்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்கான இடத்தினை தானகிரயம் செய்து வழங்கியது – மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டடு இறுதி ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை:

1) துணை இயக்குநர், நகர ஊரமைப்புதுறை, சேலம் அவர்களின் உத்தரவு கடிதம் ந.க.எண். SLM/TGAXYWKF/9305/2023/2022/TCP நாள்: 27.03.2023
2) நகர ஊரமைப்பு Approval No.SWP/DTCP/Salem/Layout No.141/2013
3) துலுக்கானூர் ஊராட்சிக்கு மனையின் உரிமையாளர் பொது சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்ட நாள்.20.03.2023
4) அனுமதி கட்டணம் ரூ.61800/- செலுத்தப்பட்ட நாள் 28.12.2023
5) கூராய்வுக் கட்டணம் ரூ.19000/- செலுத்தப்பட்ட நாள் 30.12.2023

உத்தரவு:

பார்வை 1ல் காணும் துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, சேலம் உத்தரவில், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட, துலுக்கனூர் ஊராட்சி, துலுக்கனூர் வருவாய் கிராமம். சர்வ எண்.129/2A1A1A, 129/2A1A3, 129/1B1B2 –ல் உள்ள ஊராட்சிக்குட்பட்ட 1.0275 பரப்பில் அமைந்துள்ள மனைப்பிரிவில் 19 மனைகளுக்கு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டது.

பார்வை 2ல் காணும் விபரப்படி நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக Approval No.SWP/DTCP/Salem/Layout No.141/2013ன்படி அப்ரூவல் வழங்கப்பட்டுள்ளதின்படியும், பார்வை 3ல் காணும் விபரப்படி உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது உபயோகத்திற்கான சாலைகளின் பரப்பளவு 1565.05 சதுர மீட்டர் நிலத்தினை ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1733/2023 நாள் 20.03.2023ன்படி மனைப்பிரிவின் உரிமையாளர் துலுக்கனூர் ஊராட்சிக்கு தானகிரயம் மூலம் ஒப்படைத்துள்ளார்.

மேலும் பார்வை 4ல்காணும் அரசாணையின்படி நடைமுறையில் உள்ள விதிகளின்படி மனைப்பரப்பில் உள்ள மனைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய அனுமதி கட்டணம் ரூ.61800/- (ரூபாய் அறுபத்தி ஒரு ஆயிரத்து எட்டுநூறு மட்டும்) மற்றும் கூராய்வு கட்டணம் துலுக்கனூர் ஊராட்சியில் ரூ.19,000/-(ரூபாய் பத்தொன்பது ஆயிரம் மட்டும்) பார்வை 4,5ல் கண்டுள்ளவாறு செலுத்தியுள்ளார்.

எனவே ஊராட்சிக்குட்பட்ட மனைப்பிரிவில் உள்ள 19 மனைகளுக்கு மட்டும் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சியின் மூலம் இறுதி ஒப்புதல் உத்தரவிடப்படுகிறது.

[redacted]
துலுக்கனூர் ஊராட்சி
ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்

பெறுதல்
திரு.S.ரவி
த/பெ. ரா.சதாசிவம்,
115/2 சுப்பராயன் நகர்,
புத்துமாரியம்மன கோவில் அஞ்சல்,
சேலம் - 636003.

நகல்.. சார்பதிவாளர், ஆத்தூர் அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கப்படுகிறது.

நகல்.. துணை இயக்குநர், நகர ஊரமைப்பு துறை, எண்.6, சன்னதி தெரு, சூரமங்கலம், சேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்.. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.